உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

தென்பரங்குன்றம்

பைங்கூனி

உத்சவத்துக்குச் செல்லும்

வழிநடைச்சிந்து.

இஃது

திருமங்கலம்

போர்டு 2-வது கிரேட் எலிமெண்டரி ஸ்கூல்

ஜிம்னாஸ்டிக் இன்ஸ்ட்ரக்டர்

மகா-ஈ-ஈ-ஸ்ரீ

பா. வ. சுப்பையா பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

ஹை ஸ்கூல் உபாத்தியாயர்

ஷண்முகவேலு சேர்வையின்

குமாரன்

இராமசாமி சேர்வையால்

இயற்றப்பட்டு

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1909.

210
தென்பரங்குன்றம்
வழிநடைச்சிந்து.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

தென்பரங்குன்றம் பைங்கூனி உத்சவத்துக்குச்

செல்லும்

வழிநடைச்சிந்து.

கணபதி தோத்திரம்.

வெண்பா.

கந்தருக்குமூத்த கரிமுகா நின்பதத்தைச்
சிந்தைதனிலே நினைந்து சேவித்தேன்—சிந்துதனை
பாடிப்படித்துப் பலரறியச் செப்புதற்கு
நாடினே னின்னரு ளிந்நாள்.

சரஸ்வதிவணக்கம்.

கலிவிருத்தம்.

முத்தமிழ்க்கு முதல்வி முக்குணி
சத்தியெண்மலரில் சகலகலை வாணிநீ
பத்தியாய்ச் சிந்து பாரிற்படிக்கவே
நத்தியருளீ நான்முகன் றேவியே.

சிந்து.

1 கார்த்திகைக்குச் செல்லும்பாதை நேர்த்தியாகச்சொல்வதற்
ற்கு, பார்த்திபன் மைத்துனன் மருகோனருள் பெற
சேர்த்திருக்கேன் சடாக்ஷரத்தாறினுள்.

2 சரவணபவாவென்று ஷண்முகாநின்னாமஞ் சொன்னால்
சகலவைபவம்வந்துகூடுமே பாடில்
சகடயோகமும் மாறுஜாடுமே.

3 செங்நெல்கள்விளையுந்திரு மங்கலந்தனிலிருந்து
சேவைசெய்யப்போவோம் சுப்ரமண்யனை மிக்க
வாவலுடனேபுகழ்வோந் தன்யனை.

4 அன்னமேதேனே புகழுங்கண்ணியன் பன்னிருகையன்
உன்னதஞ்சேர் கார்த்திகைக்குப் போகலாம் தொழ
வண்ணவூர்முருகன்பாதஞ் சேரலாம்.

5 சற்குணமிகுந்தபெண்ணே சாற்றுவேன்கேளடிமின்னே
ஆற்றில்போய்துவைத்து ஸ்நானம்பண்ணிக்கொள் அங்கே
போற்றிடும்முருகன்றுதி யெண்ணிக்கொள்.

6 பத்மினிப்பெண்ணுத்தமியே பாவையரேயித்துதியிற்
பத்திரமாய்ப்பொன்பணி யணிந்துகொள் இப்பச்
சித்தமாயுத்தமனைப் பணிந்துகொள்.

7 மல்லிகைமுல்லை மலருந்துல்லிய மந்தாரைபிச்சி
செல்வியேசிறப்புற்று நீயேற்றுக்கொள் முற்ற
கல்வியையமனதிருத்தி யூற்றிக்கொள்.

8 நாட்டிலரசோர்த்திலே கோஷ்டமாயிந்நேரத்திலே
பாட்டிமகன் வீற்றிருக்கார்பாரங்கே வெகு
கூட்டமாயிருக்கும் ஜனஞ்சேரங்கே.

9 வேலனுக்குழுத்தவண்டி வேழமுகமானவண்டி
தாளைநாம்சரணஞ் செய்வோந்தையலே யின்று
வேழைக்கருள்செய்வார் திருக்கையாலே.

10 கந்தனுடன்தந்தியாக முந்தமுந்தவந்தவனென்
சிந்தையிற்குடியிருப்பாய் தேவனே சிவன்
மைந்தனுகவந்துதித்த யூகனே.

11 அரிவையேநீபிரியமுடன் சரிவர்த்தெரிவ்வய்டி
யாற்றோரமநுமார் கோயிற்பார்டி- யங்கே
தீட்டுள்ளோர்கள் சென்றால்வெகுதீத்தடி.

12 எந்தவேளையுஞ்சென்றாலும் வந்தவர்க்கன்னங்கொடுக்கும்
சுந்தரதாஸ்சொந்த சத்ரம்பாரடி யிங்கே
தங்குவார்பைராகி யாத்ரைப்பேரடி.

13 கஞ்சமலரஞ்சுகமே பஞ்சலக்ஷணமமைந்த
செஞ்சிலம்பணியுமீனாளாலயம் தினம்
சஞ்சலமடைந்தார் போவார்காலையும்.

14 கர்ஜிதமிகுந்திலங்கும் கிருஷ்ணவிலாச அச்சாபீஸ்
உர்ஜிதமெவ்வாறுரைப்பேன் பாரியே தொழில்
தேர்ச்சியையிவ்விடம் நன்றாய்க்கூறியே.

15 அச்சிலேநற்கீர்த்திபெற்ற மெச்சவேயித்தொழிலுற்ற
பட்சவான் எஸ். கிருஷ்ணசுவாமி பிள்ளையாம் இவர்
இச்சையாய்ப்பணியுந் தெய்வந்தில்லையாம்.

16 மங்கையேசொல்வதைக்கேளாய்ச் சங்கையிலாப்போலீஸ்
டேஷன், பொங்கமாயமைந்திருக்குஞ் சீரதை விட்டுத்
திங்கள்முக மங்கைபோஸ்டு பாரதை.

17 செண்பகமுத்துப்பிள்ளையின் வன்புகழ்படைத்தஎஸ்எஸ்
எண்ணிலாத்தொகையுடைய கம்பெனி யிதில்
தங்கநற்ஷோக்காயிருக்கும் பெண்மணி.

18 சத்திநித்தஞ்சித்துண்டாய் பக்திசுத்திபுத்திவரு
முத்தமஞ்சேர்முனியாண்டி கோவிலே மிகப்
பத்தியுடன்பூசிப்பார்களிராவிலே.

19 எங்கும்புகழ்காளியம்மன் தங்கியிருக்கின்றபீடம்
பொங்கமுடன் போட்டிருக்குதேசுறதாய் அதை
தங்கிபேநமஸ்கரிப்பாய் சீர்தாய்.

20 எத்திசையும்போற்றுந்தமி ழிங்கிலீஷ்பாஷைபடிக்கும்
புத்திமிகும்பள்ளிக்கூடம் பாரடி யதன்
சுற்றளவென்ன விநோதம்ஜோரடி.

21 துன்னுமலர்வண்ணமிகு வன்னியன்பாதிரிபங்களா
உன்னதமென்ன பெருமைபாரடி யத
னன்னயத்தைக் கூறமுடியாதடி.

22 முன்னோராலியற்றப்பட்டு முற்றிலுமேகட்டையில்லா
முஜாபர்பங்களா ஷோக்கைப்பாரடி யிதன்தமாஷை
யென்னநான் சொல்வேன்கூறடி.

23 மாசற்றரத்னச்சித்ர மாளிகையைநாமடுத்தோம்

மானேயென்னசொல்வேனிதன்சிங்காரம் தேனே
தேசமெங்கும்புகழ்பெற்றலங்காரம்.

24 கன்னிகையேயுன்னதமாய் வண்ணமாயமைந்திருக்கும்
கச்சேரியின்கொர்ச்சிதத்தைப் பாரடி யத
னுச்சிதத்தைக் கூறமுடியாதடி.

25 பூதலத்தில்கியாதிபெறும் பூச்சிநாடார்பங்களாவிற்
சீதளம்நிறைந்திருக்குஞ் சேருவோம் நாளும்
சாதுளம்நிறைந்தவேளைக் கோருவோம்.

26 பாரடியென்னவிநோதந் தீரடிதண்ணீரின்தாகம்
கூறடியிதன்வளத்துக்கொப்பதாய் தேவன்
பேரடியென்னிதயத்தே நிற்பதாய்.

27 ஆணிமுத்துக்களெடுத்த பேரையூர்துரைகொடுத்த
யூனியன்கிளப்பைமாதே பாரடி யுற்ற
ஸ்ரீனிவாசன்தூதரிதோசேரடி.

28 புன்னகைமிகப்பொருந்துங் கன்னியேசொல்லுகிறேன்கேள்
மன்னர்தங்குமுன்னதஞ்சேர் பங்களா விது
வெண்ணிலுமுயர்ந்தவிலே தங்கலாம்.

29 அன்புபூண்டமங்கையரே தென்புமூண்டுரைப்பேன்சீரே
நண்புடனொத்தச்சியிது பாரடி சிறு
பண்புடனிருக்கும்புதுஊரடி.

30 இத்தாரணியிற்றந்திமுக னாரணியினரசோரம்
பூரணிவல்லபைபாகன் பொருந்தினர் சத்தி
காரணிகணவன்விஷ மருந்தினர்.

31 கண்மாய்க்கரைதீரத்திலே வன்மையாயின்னேரத்திலே
புண்மைபாயுரைப்பேன் மறவன்குளம் விட்டுத்
திண்மையாய்நடப்போந் திருக்குன்றில்லம்.

32 உடையம்மாள்கோவில்பாரு திடமுள்ளகப்பலூரு
குடங்கொண்டிறைக்கின்றார் நீரங்கே நாடார்
மடமுமரளிப்புஷ்பம் பாரங்கே.

33 கப்பலூர்வியப்புச்சொல்லச் சொற்பமாய்முடியாதல்லோ
விப்புவிப்பீட பூமியிலீதொண்ணு ஞானஞ்
செப்புங்குருவேலன்றுதியே யெண்ணு.

34 புத்தியிலுயர்கண்ணாட்டி நத்தியேகேளுஞ்சீமாட்டி
பத்தியாய்மனத்தில் வேலைநாட்டியே சொல்வேன்

சித்தியாற்கெட்டெண்ணத்தைத்தானோட்டியே.

பாளைவாய்க் கமுகில் வந்தூர் என்ற காவடிச்சிந்தின் வர்ணமெட்டு

35 என்னுடன்நடந்துவாடி மின்னுஞ்செந்தமிழைப்பாடி
நன்னுவோம்கூத்தியார்குண்டைநாடியே மண்ணிற்
றென்பரங்குன்றின்பனை நாம்தேடியே.

36 கூத்தியார்குண்டுக்கண்மாயினேர்த்தியையெவ்விதமுய்வேன்
பார்த்திடுவிதன்பரப்பின்றன்மையை யாவல்
தீர்த்திடுதண்ணீர்த்தாகத்தின் வன்மையை.

37 வண்டார்குழலியுயிரே தண்டவாளத்தினேர்ப்பாரே
பண்டுள்ளகூத்தியார்குண்டுப் பாலமே யெல்லாங்
கண்டுவாசம்மையிருக்குங் கோலமே.

38 மாயனும்பேயனும்பெற்றசேயனிவர் தாண்டியுற்ற
நாயனய்யனார்பதியைப் பாரடி திருவாயான்
கையனாரெனப்பேர் கூறடி.

39 இடையர்மண்டபத்தைநாடி நடையினம்மிருவர்கூடி
படையில்வேலைப்பற்றுவோனைப் பாடியே தேரின்முடியிற்
சேவலேற்றுவோனைத் தேடியே.

40 சோற்றுக்கடைமண்டபத்தினேர்த்தியை யெவ்வாறுரைப்
பேன், பார்த்துவாவிதன்வளத்தினுண்மையை தாகந்
தீர்த்துவாவிதன்ஜலத்தின் பண்மையை.

41 ஒபிலுள்ளமாதரேகாண் ரயில்வேஸ்டேஷனிதுதான்
மயிலேறுமன்னன்மலையீதடி போற்றிக்
குயின்மொழிக்கோதே யவ்வென்றோதடி.

42 நாரியேநான்கூறுகிறேன்பாரு கடைவீதிஜோரு
தேரின்பாற் ஜனங்கள் கோடாகோடியே போரூர்
வேறுவிதச்சிந்துபல பாடியே.

43 சத்தகிரிமண்டபத்தின் சுத்தத்தைச்சாற்றுகிறேன்கேள்
நித்தமுங்கோமயம் வாங்கிநிரப்புவார் சாண
மித்தநியில்வெள்ளிதிங்கட் பரப்புவார்.

44 சத்தகிரிமடமோர மெத்திசையும்நிற்கிறார்பார்
பக்திமிகும் வீரகம்படியா ரவர்
சக்தியுறறிவேங்கைப்பல முடையார்.

45 எத்திசையும்போற்றிசெய்யும் சத்தகிரியின்மடத்தே

சித்திபெறும் யோகியிருப்பார்பேதே
பக்தியுற்ற கம்படியர்க்கமைந்ததே.

46 மட்டிலடங்காததீரர் மகம்மதியரென்னும்வீரர்
திட்டமுடனே பணியும்பள்ளியே விட்டுக்
கட்டழகி வாடிசிந்துசொல்லியே.

47 மீன்விழிகளுள்ளமாதே தேன்மொழிகளுள்ளகோதே
விண்ணின்பாலுயர்ந்திருக்கும் கோபுரம் நேர்மை
யென்னசொல்வேன்கீழ்புற மலங்காரம்.

48 பாவைதிருநீறுவள்ளு தேவையுள்ளவஸ்துசொல்லு
பூவையேநாம்போற்றும்வேலன் சந்நிதி அஞ்சிக்
காவையேமுருகாவெனப் பண்துதி.

49 சந்ததமிகப்பொருந்துங் குஞ்சரிமகிழுங்குற
வஞ்சியின்மனதுறை சையோகனே பால்
னஞ்சினேன்கடைக்கண்பாரு மேகனே.

50 வெள்ளியங்கிரியிற்றானே துள்ளிவிளையாடுங்கோனே
செல்வியைமணம்புரிந்த தீரனே முற்று
மள்ளிவிடுகல்வியைத்தான் யேகனே.

51 ஆறுமுகவடிவேலா தீராவினைதீர்த்தலோலா
காரும்மேகவண்ணன்புத்திரி பாகனே யெனக்
காதரவார்நின்னையல்லால் யோகனே.

52 புள்ளிமயின்மீதிலேறும் வள்ளிதெய்வயானைபாகன்
தெள்ளியசிவசங்கரன் பாலனே தீரா
துள்ளியவசுரர்குலகாலனே.

53 அம்மாவிந்தத்தேரின்சாய லெம்மாலேசொல்லவோவாயா
விம்மாதிரிவிள்ள வாதிசேஷனே கூடா
நம்மாலேபுகழமுடியாதென்னே.

54 பறங்குன்றம்போலீஸ்டேஷ னாரமுள்ளமண்டபத்தி
லறமுற்றிருப்பதைப்பாரங்ஙனம் தேரின்
திரமுற்றகருப்பணனிங்ஙனம்.

55 தேர்டிக்கருப்பணன்றன் வீறடிசொல்லமுடியா
பார்டியவர்பதியக்கோவிலுள் மனந்
தேறடிசுற்றிவந்தேறுவோ மீதுள்.

56 சரவணப்பொய்கையிலே திரமுடன்ஸ்நானஞ்செய்து
விரைவாய்க்கிரிவலமாக்வே போவோம்

மறையிற்சொல்லியப்படியாகவே.

57 சேல்போல்விழியுடையாளே பாற்கிணறென்றுமுன்னாலே
யார்க்கும்பவபோக்கு மதுயோக்யமே வியாதி
தீர்க்கும்வேலன்தீர்த்தமாஞ் சிலாக்யமே.

58 தீர்த்தவகைசொல்லவென்றால் யார்க்குமேமுடியாதொன்றா
லேற்குமோநான்சொல்வதநியாயமே சேஷன்
வாக்கிலேவர்ணித்தாலினிஞாயமே.

59 பரமேஸர்மைந்தர் விக்கினேஸ்வரராலயம்பாரு
மருவப்பூமடந்தையர் பாங்கிமார் ரெம்ப
விருப்புடனிருவாட்சி வாங்குறார்.

60 பொங்கமாயிப்பொய்கையிலே தங்கியேகுளிப்போஞ்சேலை
சங்கமாய்த்துவைப்போரைநீபாரடி தப்பி
செங்கமலப்பேதையேநீராடடி.

61 முப்பத்துமுக்கோடிதேவ ரிப்புனலைச்சுற்றிமூவர்
நாற்பத்தெண்ணாயிரரிஷிக்கூட்டமே சிவன்
சற்புத்திரர்பிறப்பாரெனக்கோஷ்டமே.

62 சந்திரன்முகத்தையொத்த விந்திரன்முகமலர்ந்து
சிந்தித்தான்குமரர்பிறந்தாரென தேவர்
நிந்தித்தாரசுரரைத்துஷ்டரென்.

63 பாலசுப்ரமண்யரன்று வேலாயுதங்கொண்டுசென்று
காலனைப்போல்நின்றுசூரரைக்கொன்றார் யுத்தங்
கோலாகலமாகப்புரிந்து வென்றார்.

64 சர்வணப்பொய்கையிலே சிரம்பட்டமிழ்ந்ததாலே
சகலபாவமும்நீறாய்ப்போகுமே புண்யம்
மகமேருகிரியளவாகுமே.

65 இத்தகையகோலங்கொண்ட வத்தனுமுருகேசன்மா
வுத்தமனவ்தரித்த பொய்கையே மூழ்கி
சித்தன்வேலவன்மேற் பக்திசெய்வையே.

66 மெய்யிற்றிருநீறுபூசி யய்யன்வேலன்கதைபேசி
தையலேபுறப்படுகிறிசுற்ற காசு
ஈயுவேன்கைகாலில்லாபரமெத்த

67 கண்ணில்லாக்குருடெத்தனைக் காலில்லாமுடமெத்தனை
மூக்கில்லாமூக்கறைபிச்சையென்கிறான் பொரி
நாக்கில்லாநரனொருவன்தின்கிறான்

68 கஷ்டமாய்ப்படுத்திருக்குங் குஷ்டநோய்பிடித்தவன்பார்
இஷ்டசகிமுன்றுபைசாபோடடி யிது
அஷ்டதரித்திரமானகேடடி.

69 ஜெகம்புகழுங்கருப்பணசமகிழ்ந்திருக்கும்பீடம்
தகதகவெனவேபூசியிருக்கும் அங்கே
ஏகமாய்ஜனங்கள்கூடிநெருக்கும்.

70 பெண்ணேயிந்தத்தோப்பைப்பாரு முன்னேபோகுங்கூட்டம்
யாரு, இன்னதென்றுனக்குத்தெரியாதடி சொல்லே
னுன்னதமாய்ப்போகுமச்சக்காவடி

71 சிறப்பாயிருக்குஞ்சாமி யிருப்பிடமிதுவாமிக்
கருப்பணசாமிகோயிலிதடி ரொம்ப
விருப்பமாய்க்குடிப்பார்மதுவடி

72 மங்கையேகெம்பீரமாக வெங்கிலும்புகழ்பெற்றோங்கும்
மாளிகையெவரதெனத்தெரியுமா ரெண்டு
நாழிகைசுற்றியேபார்ப்போம் பிரியமா.

73 காரிழையகம்பொருந்தும் பாரிலேமிகச்சிறந்த
பேரையூர்மகாராஜாவின்பங்களா விதோ
நேரேபோயழகைப்பார்த்துநீங்கலாம்.

74 பூதலத்திலேபரந்த சீதளம்மிகச்சிறந்த
பூதழைந்திருக்குமிவர்புனமே யிங்கு
மாதுளஞ்செடியிருக்குகனமே.

75 பக்தியிற்சிறந்தபூமான் நித்தியம்பூஜைசெய்சீமான்
நத்தியநரர்க்குநன்றிபெய்கோமான் நாளுஞ்
சக்தியில்தெண்டாயுதந்தாங்கும்வீமன்

76 பூவுலகிலேவேலனை யாவனுடனேபணியும்
பாவலர்களிலேமிகச்சிறந்தவர் போற்றும்
நாவலர்கட்கறமீபப்பிறந்தவர்

77 ஷண்முகவிமலர்தன்னை பொன்மலரால்பூஜைபண்ணும்
புண்ணியன்பேரையூர்த்துரைக்காவலன் பசுஞ்
செந்நெல்கள்விளையுந்துறைத்தாவளன்.

78 மன்னன்பேரையூர்த்துரைவர் கர்னனையொத்தவிறைவர்
அருணகிரியார்செய்திருப்புகழே பாடில்
வருணனும்பொழிவான்மழைமகிழே.

79 சூரசங்காரவேலவன் சுப்ரமண்யர்கிருபையால்

சுற்றளவுள்ளகுளத்தில்விளைந்ததே முத்து
நற்றவமணியினிலுஞ்சிறந்ததே.

80 சேவற்கொடிக்காவலனே யாவலுடனேபணிந்தே
னேவற்செய்புமேழையைக்கண்பாரய்யா மெய்யிற்
சோகஞ்செய்யுநோயகலத்தீரய்யா.

81 தாயேவள்ளிதெய்வானையே சேயனைப்பாதுகாப்பாயே
மாயன்மகளாய்ப்பிறந்தசெல்விகா ளெந்தன்
நாயம்நின்னடிமையல்லா தில்லையாள்.

என்னடி நான்பெற்றமங்கை என்ற காவடிச்சிந்தின் வர்ணமெட்டு

82 ஆறுமுகவடிவேலா சிவன்பாலா
வெனையாளா வள்ளிதெய்வயானைமணவாளா
போற்று மடியேன்தமிழ்முடிவாகவே சிறியேன்றுயர்நொடிமீ
தினி லற்றுப்போகச்செய்வாய்சீலா கவி
முற்றும்பிழையின்றிவேலா.

83 சந்நிதியின்பாற்வந்தோமே விநோதாமே
வாங்குவோமே பழந்தேங்காயுடன்புஷ்பந்தாமே
சூடன் பத்தியுடன்தித்திப்பன சுத்தமதாயித்ததியிற்
பாலுடன்நெய்யதைவாங்கு தண்டைக்
காலுடன்பொய்கைக்குநோங்கு.

84 சோபுரவாசலைப்பாரு உயர்நேரு
வெகுஜோரு விட்டுக்கீழ்புறம்பொய்கையைச்சேரு
நீரு வளமாகிய நிலமீதினிற்றளமாகவேபுனலிருந்து
தத்தளிக்குதுநீரலையே கைகால்
சுத்தமாய்க்கழுவுசெல்வியே.

85 வஞ்சியிளங்கொடியாளே குயில்போலே
குரலாளே யடிகம்பத்தைப்பார்தங்கத்தாலே
கேட்கும் வரமேதரு முருகன்பதியிதோ பாரிதுபடிமீதினி
லேறியேபாரடிகண்ணே சக்தி
கூறினேனிப்போதுபெண்ணே.

86 பாவையரேமூலஸ்தான மறுகோணஞ்
சித்திகாணும் மூலமந்திரத்தாலுயிர்பூணுஞ்
சொர்ண சக்கரத்தாலுக்கிரமாய் மிக்கநவலட்சணமாய்
சுந்தரமாமயில்வீரன் புஷ்ப
கந்தமணிந்திடுந்தீரன்.

87 உல்லாசமாகவேதானே வேலன்மானே

செப்புவேனே மிருவல்லாசமாயிருக்கானே
போற்ற அழகாகியமயின்மீதினிற் புகழாகியயன்னையோடிய
ரற்புதவேலதைத்தாங்கி சத்தி
பொற்பணியாளிடம்வாங்கி.

88 பட்டரிடத்திலேகண்ணே சாமான்தன்னே
கொடுமுன்னே இணைத்தபிஷேகம்பண்ணுவார்சொன்னேன்
பின்பு வடிவேலனேயெளிதாகிய மனமீதினில்முடிவைத்துமே
மானதபூஜைசெய்போற்றி வெளி
போனமனதைதரீதேற்றி.

89 கந்தபுராணத்தைப்பாரு வதில்கூறுஞ்
சண்டைநேரும் விதமந்தமதாய்ப்புகன்றுரு
யவ ராதிமுதலீருகவே கியாதிபெறநீதியதா
யண்ணல்சூதகமாமுனிவ ருரைத்
தின்னமுங்கவிசெப்பிடுவார்.

90 பிரசாதச்சாமானேவாங்கு வெளிநோக்கு
ஸ்தலப்பாங்கு திருவாச்சியைவிட்டுநீங்கு
கன தித்திப்புடன்விற்பனேக்குச்சித்தமதாய்வைத்திருக்கும்
ஜிலேபி, பூந்தியின்சேரு விலே
பலேயணுவெட்டுப்பாரு.

ஒயிற்கும்மி.

91 வள்ளியைக்கண்டு மோகங்கொண்டு வனம்வந்தவனேமுத்தந்
தந்தவனே, வாதேதருசூதன் சிரமீதேகணேதீதேதர
வான்றப்பிரயோகஞ்செய்தவனே.

92 வீரவாகுதேவர் தூததுசெல்லவே பீதிகொண்டார் துஷ்ட
வசுரருமே, வாதுசெய்தேசூரன்மகன் வீரன்பானுகோபனே
யும், வாட்டினுர் வேலாதமயருமே.

93 உன்னேப்போற்தெய்வ முலகிலென்றுண்டென்று வண்ணலே
திண்ணம் நினேக்கவில்லே, யடியேன்வினேபடிவாகவே நொடி
போதினிலறிவாகவே, வாதியேவோதினேனின்பதத்தை.

94 சங்கமாய்நாவலர் தங்கிப்புகழ்கின்ற லிங்கிர்தவேலன்மல
ரடியை, திங்கள்முக மங்கையேநாம் செங்கைவடிவேலனென
கங்கைமகன்திருக் காலடியில்.

95 ஆறிருதோளனே யவுணர்க்குக்காலனே யாறுமுகவடிவேல
வனே, அய்யாகளிசெய்யவென்னத்தயலரேசெய்வோம்பணி
யிலான்மயில்வாகன்னடியை.

96 பாதிமதியணிப் பன்னகப்பூஷணன் பாலகாவெங்கள்குலகுரு
வே, சோதியேநீவேதத்தினை யோதுவாய்நின்பாதமலர்
சோகமில்லாமற் பணிவேனே.

கும்மி.

97 தென்பரங்குன்றினில் வாழுஞ்சுப்ரமண்ய தேவன்முருகன்
மேற் கும்மிசொல்ல தீரனானகஜமுகனைவதைத்த செல்வன்
கணபதிகாப்பாமே.

98 சூரனைச் சங்காரஞ் செய்தவனே வடிவேலெடுத்துக் கையிற்
கொண்டவனே, பாரிலுனைப்போற்றும் பக்தர்க்கிரங்கி
நின்பாததரிசனந் தந்தவனே.

99 கார்த்திகைக்குவந்து போற்றிப்போகும்ஜனம்
நேர்த்தியைப்பார் சாலைபூர்த்தியதாய்
தீர்த்திடுநோயைக் கண்பார்த்திடப்பெண்ணென்று
தோத்திரஞ்செய்கிறார் பார்ப்பினிமார்

100 பாதைதொலையநான் ஈதைசொன்னேனிப்போ
சேதமில்லாரயில் வண்டியிலே
துரிதமாய்ப்போகவே பிரீதியாய்த்தோணகையே
தோணுதுபார்ரயில் ஸ்டேஷனுமே.

101 இஷ்டசகியேநான் டிக்கட்டுவாங்கினேன்
கஷ்டமில்லாமல் பதஷ்டமுடன்
அஷ்டதிக்கிலுமே நஷ்டவர்ச்செய்யா
கோஷ்டமுள்ளதந்திப் போஸ்டிதுபார்.

102 காலையுமாலையு மிராவிலும்போதும்
வேளைகொஞ்சமேனுந்தப்பாமல்
நாளையுமேலையு மப்பாலுமோடிடும்
பாலத்தில்வண்டிவருகுதுபார்

103 கன்னியேபார்டி யெண்ணில்லாச்சனங்கள்
உன்னியே வண்டியிலேறுதடி
யுன்னதமாகவே யன்னமேவிரைவாய்
நன்னயமாய் ரயிலேறுமடி.

104 எண்டிசையும்புகழ் கொண்டவறுமுக
னண்டையிலேகுந்துமம்மைக்களை
சென்றுகொண்டிருக்கும் வண்டியிலிருந்து
தியானிப்போமம்மையின்ஸ்தோத்திரத்தை

105 சித்தினியேரயில்ஸ்டேஷனிதுவடி
பத்திரமாய்க்கீழேபார்த்திறங்கு
வுத்தமியேநம்மனோர் திருமங்கலம்
நேர்த்தியைப்பார்பொருள்மங்களமே.

106 சீர்பெருகுதிருமங்கலந்தன்னிலே
சேர்ந்தவடக்குத்தெருவாஸன்
பார்புகழ்வாத்தியார்ஷண்முகவேல்சேர்வை
பாலனிராமசாமிபாடுங்கவி

107 ஏராளமாய்ப்பிழைவேணதிருந்துமே
சேராமற்சொற்குறைதோன்றினுமே
யன்னம்நீர்ப்பாலையருந்துந்தன்மைபோல
சின்னஞ்சிறுவன்பிழைபொறுப்பீர்

108 சிறுவன்பாடுங்கவி பெரும்பிழையானாலுஞ்
சீரிலுயர்பெரியோர் பொறுப்பீர்
பாரிற்குமரனைக் குளறிக்குளறி
பாடுமென்றேபெரியோருரைத்தார்

109 பாடினோர்கேட்டோர் படித்தோர்மிகவாழி
ஆடியபொன்னம்பலன்பாலன்
தேடிவரந்தருந்தென்பரங்குன்றோனை
கோடிச்சரணங் கொணர்ந்தேனே.

110 அன்னைவள்ளி தெய்வயானைமிகவாழி
யச்சிலிட்டோர்வாழிவாழியதே
யிந்நிலந்தன்னில் கண்ணன்மருகோனை
நண்ணினோரெக்காலமும்வாழி.

111 மண்ணிற்பஜனையெந்நேரமுமேசெய்யு
மண்ணாற்கட்கோங்கும்புகழ்வாழி
நன்னயமாயெங்கள்பஜனைத்தலைவர்
ஷண்முகக்கொத்தனார்க்குவாழி

112 வேலனைப்போற்றிடுஞ் சீலர்க்குயானொரு
விண்ணப்பஞ்செய்தேனினிதாக
மண்ணிற்பரங்குன்றவேலனைப்பணிந்தோர்க்
கென்றுஞ்சுகவழியெய்திடுமே.

முற்றிற்று.